செ.வெ.எண்.12 நாள்: 07.11.2019

தூத்துக்குடி மாவட்டம் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் சங்கம் சார்பாக குழந்தைகள் தின விழா போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற பள்ளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கேடயம் வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்டம் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் சங்கம் சார்பாக ஆறுமுகநாடார் ராஜம்மாள் திருமண மண்டபத்தில் குழந்தைகள் தின விழா நடத்தி பள்ளிகளுக்கு பரிசு மற்றும் கேடயம் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.11.2019) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துகொண்டு பேச்சு போட்டி, கலை இலக்கிய திறன் போட்டி, ஓவியப்போட்டி உள்ளிட்ட போட்டிகளில் அதிக அளவில் மாணவ, மாணவிகளுக்கு பங்கேற்க செய்து வெற்றி பெற்ற பள்ளிகளை சேர்ந்த தலைமை ஆசிரியர்களிடம் கேடயங்களை வழங்கினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14ம் தேதி குழந்தைகள் தினவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் சங்கம் சார்பாக குழந்தைகள் தின விழா நிகழ்ச்சி முன் கூட்டியே இன்று நடத்தப்பட்டது. இந்த விழாவில் மாணவ, மாணவியர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக பல்வேறு போட்டிகளில் 53 பள்ளிகளை சேர்ந்த சுமார் 21000 மாணவ, மாணவிகளுக்கு பங்கேற்று இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது. நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளின் மாணவ, மாணவிகளுக்கு கல்வி கற்றுக்கொடுக்க வேண்டியது ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாகும். மாணவ, மாணவியர்கள் பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக ஆசிரியர்களிடம் அதிக நேரம் இருப்பார்கள். இந்த நேரத்தில் ஆசிரியர்கள் மாணவ செல்வங்களுக்கு கல்வி மட்டும் அல்லாமல் நற்பண்புகளை கற்றுத்தர வேண்டும். குறிப்பாக மாணவர்களிடம் உள்ள தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ள நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். மேலும், விளையாட்டிலும் மாணவ செல்வங்கள் நல்ல நிலையை அடையவும், உடல் ஆரோக்கியத்துடன் இருக்கவும் ஊக்கப்படுத்திட வேண்டும். சிறு வயதில் இருந்து பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவ, மாணவியர்களை திறன் போட்டியில் கலந்துகொள்ள ஊக்குவிக்க வேண்டும். மாணவ செல்வங்கள் சிறுவயதில் இருந்தே பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வந்தால் எதிர்காலத்தில் எந்த பயமும் இல்லாமல் தன்னம்பிக்கையுடன் வெற்றி பெற முடியும். மேலும், வீட்டில் பெற்றோர்கள் அளிக்கும் பாதுகாப்பு போல் குழந்தைகளுக்கு பள்ளிகளில் நீங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். நீண்ட நாள் விடுப்பில் இருந்தால் இந்த மாணவர்களின் பெற்றோர்களிடம் தொடர்பு கொண்டு விடுப்பு காரனம் குறித்த தகவல் பெற வேண்டும். பள்ளி வளாகங்களில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும். இந்த சமுதாயத்தில் சிறந்த மாணவர்களை உருவாக்குவது ஆசிரியர்களின் பொறுப்பு என்பதை உணர்ந்து முழு ஈடுபட்டுடன் கல்வியினை கற்றுத்தர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி டி.எஸ்.பி. திரு.பிரகாஷ், தூத்துக்குடி மாவட்டம் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் சங்கம் தலைவர் திரு.சங்கரலிங்கம், துணை தலைவர் திரு.ராஜசேகரன், செயலாளர் திரு.ஜோசேப், பொருளாளர் திருமதி.ஜோய் பெல் பிரேங், ஆலோசகர் திரு.சுயம்புலிங்கம், திரு.அசோகா மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி